2461

தரம் 8

முதலாந் தவணைப் பரீட்சை - 2018

தமிழ் மொழியும் இலக்கியமும்

சேர்விலக்கம் :

நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி I

- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
- மிகப் பொருத்தமான விடையினைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.

(1) ஆயிரம் முகங்கள் கொண்டது வாழ்க்கை. முகம் என்பதன் ஒத்தகருத்து,
1) குணம் 2) வதனம் 3) சிரசு 4) சென்னி

(2) "சத்ருக்கனின் உள்ளத்தில் கோபமாகிய ஒரு உணர்ச்சி எல்லை மீறிக் கிளம்புகின்றது." இங்கு கோபம் என்பதன் ஒத்தகருத்து,
1) சாந்தம் 2) அழுகை 3) சினம் 4) கவலை

(3) தன்னையும் வருத்திக் கொண்டு பிறரையும் வருத்துகின்றான் கைகேயியின் கணவன். இங்கு பிறர் என்பதன் எதிர்க்கருத்து,
1) தமர் 2) மறர்
3) உள்ளே இருப்போர் 4) அடுத்தவர்

(4) அரசன் இல்லாமல் நாடு இருக்கக்கூடாது என்றான் பரதன். இங்கு அரசன் என்பதன் எதிர்க்கருத்து,
1) ஏழை 2) ஆண்டி 3) குடி மக்கள் 4) காவலன்

(5) தமயன் கடந்த பத்து வருஷ காலமாக கலியாணங்களுக்கு மட்டும் போய் வந்து கொண்டிருந்தான். இங்கு தமயன் என்பதன் எதிர்ப்பால்,
1) தமச்சி 2) தமக்கை 3) தமயை 4) தமயனி

(6) ஆண் குதிரை குண்டு என்பது போல பெண் குதிரை,
1) பிணை 2) பிணா 3) மந்தி 4) வடவை

(7) நெல்லின் வித்து மணி என்பது போல ஆமணக்கின் வித்து,
1) வித்து 2) விதை 3) பருப்பு 4) முத்து

(8) ஒரு நூலுக்கு நூலாசிரியர் தவிர்ந்த ஏனையோர் வழங்கும் புகழுரை,
1) முன்னுரை 2) அணிந்துரை 3) பதிப்புரை 4) ஆசியுரை

(9) குழந்தைகளின் உள்ளம் கள்ளங்கபடமற்றது. இங்கு கள்ளங்கபடம் என்பது,
1) இரட்டைக் கிளவி 2) அடுக்குத் தொடர்
3) அடுக்கிடுக்குத் தொடர் 4) இணைமொழி

www.ikeduk.lk

Scanned by CamScanner





மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

Medium

தமிழ்/ English

தரம்
01-A/L

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

(10) பூசி மெழுகுதல் என்ற மரபுத் தொடரின் கருத்தாவது,

1) குற்றத்தை மறைத்தல்.
2) தந்திரமாகப் பேசுதல்.
3) ஏமாற்றுதல்.
4) மனமின்றிப் பேசுதல்.

(11) சரியான வழிகாட்டி அமையாத சமூகம் திசைமாறிப் போவதைக் குறிக்கும் உவமைத் தொடர்,

1) வலையிற் சிக்கிய மான் போல
2) அம்மி துணையாக ஆற்றில் இறங்கியது போல
3) மீகாமன் இல்லாத மரக்கலம் போல
4) பசுமரத்தாணி போல

(12) ஆட்டோமடிக் (Automatic) என்பதன் தமிழ் வடிவச் சொல்,

1) இயல்பாக்கி
2) ஒலிவாங்கி
3) தானியங்கி
4) நுணுக்குக்காட்டி

(13) ஊதை, கால், பவனம், மாருதம், வளி ஆகிய பொருள்களைக் குறிக்கும் ஒரு சொல்,

1) சோலை
2) காற்று
3) வயல்
4) உடம்பு

(14) உயிர் எழுத்துக்களில் நெடில் எழுத்துக்களின் எண்ணிக்கை,

1) 5
2) 7
3) 12
4) 18

(15) பின்வருவனவற்றுள் காரணப் பெயராக அமைவது,

1) மலை
2) கட்டில்
3) பாக்கு வெட்டி
4) புத்தகம்

(16) 'மாணவருக்கு உரியது அடக்கம்' எனும் வாக்கியத்தில் நான்காம் வேற்றுமை ஏற்றுள்ள பொருள்,

1) கொடை
2) முதற்காரணம்
3) தகுதி
4) உறவு

(17) மரத்திலிருந்து விழுந்த கனியில் மண் ஒட்டிக் கொண்டது. இவ்வாக்கியத்தில் வந்துள்ள எழுவாய்,

1) மரம்
2) மண்
3) கனி
4) ஒட்டிக்கொண்டது

(18) "நான் ஓவியத்தை வரைந்தேன்" இங்கு வரைந்தேன் என்பது,

1) தெரிநிலை வினைமுற்று
2) எச்ச வினை
3) குறிப்பு வினை
4) வினை எச்சம்

(19) படிப்பான் என்பதில் காணப்படும் எதிர்கால இடைநிலை,

1) படி
2) பா
3) ஆன்
4) ப்

(20) ஐயோ! அவர்கள் இறந்து விட்டார்களே! இவ்வாக்கியத்தில் இடப்பட்டுள்ள நிறுத்தற் குறியீடு,

1) உறுப்பிசைக்குறி
2) விட்டிசைக்குறி
3) மெய்ப்பாட்டுக்குறி
4) தொடரிசைக்குறி

(40 புள்ளிகள்)

www.ikeduk.lk

Scanned by CamScanner

பகுதி II

♦ முதலாம், இரண்டாம், மூன்றாம் வினாக்கள் உட்பட எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

(1) பின்வரும் தலைப்புக்களில் எவையேனும் ஒன்றைத் தெரிவு செய்து ஏறக்குறைய 150 சொற்களில் கட்டுரை வரைக.

(அ) விஞ்ஞானத்தின் விந்தை.

(ஆ) உடற்பயிற்சியும் நாமும்.

(இ) நான் பறவையானால்.....

(ஈ) நாட்டார் பாடல்கள்.

(20 புள்ளிகள்)

(2) உங்கள் பாடசாலையில் நடைபெற்ற இல்ல விளையாட்டுப் போட்டி பற்றியும் அதில் நீங்கள் பெற்ற வெற்றிகள் பற்றியும் வெளிநாட்டில் வசிக்கும் உமது தந்தைக்கு ஒரு கடிதம் வரைக.

(10 புள்ளிகள்)

(3) பாடநூலை மையமாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) "வாழ்வதற்காக வாசி" எனும் பாடத்தில் குறிப்பிடப்படும் "போரும் அமைதியும்" எனும் நாவலின் ஆசிரியர் யார்?
2) தசரத மன்னனின் நான்கு மகன்மாரும் யாவர்?
3) "நாராய் நாராய்....." எனத் தொடங்கும் பாடலைப் பாடிய புலவர் யார்?
4) ஸ்கொட்லாந்து நாட்டுக்கு விடுதலை பெற்றுக் கொடுத்தவர் யார்?
5) அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது தமிழ் பேராசிரியராகப் பதவியேற்றவர் யார்?

(10 புள்ளிகள்)

(4) பின்வரும் வாக்கியங்களில் பயன்படுத்தப்பட்டுள்ள வேற்றுமை உருபு, வேற்றுமைப் பொருள் என்பவற்றை இனங்கண்டு அட்டவணைப்படுத்துக.

1) மானினது கொம்பு உடைந்தது.
2) வளையலுக்கு பொன் உருக்கினான்.
3) தம்பி ஓவியத்தை வரைந்தான்.
4) வில் வித்தையில் சிறந்தவன் அருச்சுணன்.
5) ஆசிரியர் பாடசாலையில் நீங்கினார்.

(10 புள்ளிகள்)

www.ikeau.lk

Scanned by CamScanner

(5) பின்வரும் சொற்களுக்குக் கருத்து புலப்பட வாக்கியம் அமைக்க.

1) பரவை
   பறவை
2) மரை
   மறை
3) அலை
   அளை
4) அலகு
   அளகு
5) வன்மை
   வண்மை

(10 புள்ளிகள்)

(6) பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

1) தெரிநிலை வினைமுற்றின் அமைப்பைத் தருக.
2) நிகழ்கால இடைநிலைகள் எவை?
3) ஐந்தாம் வேற்றுமைக்குரிய பொருள்களைத் தருக.
4) முதல் எழுத்துக்களின் எண்ணிக்கை யாது?

(10 புள்ளிகள்)

(7) பின்வரும் பந்தியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

உலகின் அடையாளம் உயிர்களே. பல்லுயிர் பெருக்கமும் வாழ்வுமே பூமியின் ஆன்மா. ஒளி, காற்று, மண், நீர் இவற்றின் சமநிலையே உயிர்களின் தோற்றக் காரணம். உயிர்களின் சமநிலை குலைந்தால் இயற்கையின் சமநிலை குலைந்து பூமியே அழிந்துவிடும். அதாவது உயிர்கள் அனைத்தும் மடிந்துவிடும். பின்பு பூமி சமநிலையான உயிர் தோற்றச் செயற்பாட்டில் தன்னை புதுப்பித்துக் கொள்ளும். ஆயிரக்கணக்கான ஆண்டுகளின் பரிணாம வளர்ச்சி முற்றிலும் முடிந்து புதிய பரிணாமம் தொடங்கும். இன்றைய வளர்ச்சியைப் பெற இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் ஆகும். எனவே சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாத்து உயிர்களின் சமநிலையைப் பேணி இந்த உலகத்தைக் காக்க வேண்டும்.

1) பூமியின் ஆன்மா எதுவென ஆசிரியர் கூறுகிறார்?
2) உயிர்களின் தோற்றக் காரணம் யாது?
3) பூமி எதனால் அழிந்துவிடும் என ஆசிரியர் கூறுகிறார்?
4) இப்பந்தியில் ஆசிரியர் கூறவரும் செய்தி யாது?
5) பின்வரும் சொற்களுக்கு ஒத்தகருத்து தருக.
   (அ) காற்று
   (ஆ) பூமி

(10 புள்ளிகள்)

www.lkedu.lk

Scanned by CamScanner